தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.
www.tsch.org.au
homebushtsch@gmail.com

## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 3

அனைவருக்கும் வணக்கம்

### பாவேந்தர் பாரதிதாசன்

பாவேந்தர் பாரதிதாசன் மிகச் சிறந்த தமிழ்க் கவிஞர். அவர் பாரதியாரின் பாடல்களால் கவரப்பட்டார். அதனால் பாரதிதாசன் என்று தனக்குப் பெயர் வைத்துக்கொண்டார்.

**"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"**

என்ற பாரதிதாசனின் பாடல் அவரது தமிழ் உணர்வை எடுத்துக் காட்டுகின்றது.

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"**

என்ற அவரது பாடல் எமக்குத் தமிழ் உணர்வை ஊட்டுகின்றது.

தமிழுக்கும் தமிழர்களுக்கும் துன்பம் நேர்ந்த போதெல்லாம் பாரதிதாசனின் கவிதைகளில் கோப உணர்ச்சி பொங்கும்.பாரதிதாசனின் கருத்துகள் புதுமையானவை. கவிதைகள் எளிமையானவை. அவரது கவிதைகளை நாமும் படித்துச் சுவைப்போம்.

நன்றி

வணக்கம்